


முல்லைத்தீவு குமுழமுனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.

# வைத்தியர் செல்லையா சாமிநாதர் (R.A.M.P)

(கரடிப்பூவலார் இராச வைத்தியர் 20வது தலைமுறை)


அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்


## 14.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை
அமரர்.கரடிப்பூவலார் இராச வைத்தியர் (19வது தலைமுறை)
சிவசம்பு செல்லையா




இளமைக்கால தோற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பல ஆண்டுகள் வாழ்ந்து யுத்தத்தில்
முற்றாக அழிந்த வீடு



பழைய அழிந்த வீட்டுக்குப்பதிலாக அதே இடத்தில் புதிதாக கட்டப்பட்டு
வாழ்ந்த புதிய வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு குமுழமுனை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## அமரர்.

## கரடிப்பூவலார் இராச வைத்தியர் (20வது தலைமுறை)

# செல்லையா சாமிநாதர் (R.A.M.P)

அவர்களின் நினைவுகளை சுமக்கும்

# 31ஆம் நாள் நினைவுப் பொக்கிஷம்

## 14.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

முல்லை மாவட்டத்தில் குமுளமுனை கிராமத்தை நோக்கி பல மாவட்டங்களில் இருந்தும் தனது சித்த வைத்தியத்தால் நோயாளிகளை வர வைத்து நோயைத் தீர்த்து அனுப்பி வைத்த பெருந்தகை கரடிப்பூவலார் இராச வைத்தியர் செல்லையா சாமிநாதர் 15.01.2018 அன்று பிரபஞ்சத்துடன் ஒன்று கலந்தார். அவர்தம் பாதங்களுக்கு இம்மலரைக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரடிப்பூவலார் இராச வைத்தியர் அமரர். செல்லையா சாமிநாதர் அவர்களின்

## வாழ்க்கை சரிதம்

இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டம் பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது. இம்மாவட்டத்தில் குமுழமுனை கிராமம் மிக அழகானது. கடல், ஆறு, குளம்,காடு, சிறுமலை, வயல்நிலங்கள், தோட்ட நிலங்கள் போன்றவற்றால் சூழ்ந்து தனித்தன்மையுடன் திகழும் கிராமத்தில் கரடிப்பூவலார் இராச வைத்தியர் சிவசம்பு செல்லையா தங்கநாச்சி தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக சாமிநாதர் 1934.01.31ஆம் திகதி பிறந்தார்.

இவரது தகப்பனார் சிவசம்பு செல்லையா கடும் உழைப்பாளியும், சிறந்த கல்விமானும் ஆவார். இவர் முதலில் திருகோணமலை நிலாவெளியில் மாணிக்கம் என்பவரை திருமணம் செய்திருந்தார். இரண்டு மூன்று வருடங்கள் குழந்தைகள் இல்லாத காரணத்தாலும், குழந்தைகள் பிறப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தாலும் மனைவியின் தங்கையான தங்கநாச்சியை மனைவியின் சம்மதத்துடன் திருமணம் செய்தார். அதன்பின், தங்கநாச்சிக்கு மூன்று குழந்தைகள் பிறந்தார்கள். இவர்கள் மூவரும் இரு தாய்மார்களின் பராமரிப்பில், இரு தாய் மார்களினதும் தந்தையினதும் பரம்பரை சொத்துக்கள் நிறைந்திருந்த காரணத்தால் செல்வச்செழிப்பில் மகிழ்சியாக வாழ்ந்தார்கள்.

அப்போது தான் துன்பங்கள் தொடர ஆரம்பித்தது. இவர்கள் சிறு பராயத்திலேயே இரு தாய்மார்களும் அடுத்தடுத்து ஒரே மாதத்தில் நோய் வாய்ப்பட்டு இறந்தார்கள். பின்பு சில வருடங்களில் வீடு தீப்பற்றி எரிந்தது. இங்கு வீடு என குறிப்பிடுவது பழைய கால பனை ஓலைகளால் வேயப்பட்ட மால்கள், நெல் களஞ்சியப்படுத்தும் கொம்பரைகள், நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறும் திண்ணைகளைக் கொண்ட கொட்டகைகள் போன்றவையாகும். இங்கு பல தலைமுறைகளாக பேணப்பட்ட ஓலைச்சுவடிகள் பல அரிய நூல்கள், சித்த வைத்தியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையாக பாவிக்கப்பட்ட வெண்கல பித்தளைப் பாத்திரங்கள் அனைத்துமே எரிந்து நாசமாகின.

இவவிடத்தில் 19வது தலைமுறை சித்த வைத்தியர் செல்லையா அவர்களின் முன்னோர்கள் பரம்பரையினர் பற்றி விளக்க வேண்டும். இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் அரசர்கள் வன்னியை ஆட்சி செய்த காலத்தில் அரச குடும்பத்தினருக்கு சிகிச்சை அளிப்பதற்காக தென்னிந்திய அரசரிடம் உதவி கேட்கப்பட்டதாகவும் தஞ்சாவூரில் சித்த வைத்தியத்தில் சிறந்து விளங்கிய சிவசம்பு என்ற சித்த வைத்தியரையும் குடும்பத்தினரையும் அங்கிருந்து இங்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் பரம்பரையாகவும் ஏட்டுச்சுவடிகளில் எழுதப்பட்டதாகவும் கூறப்பட்டும் வருகிறது. இவரது வைத்திய திறமையை பாராட்டிய அரசன் இராச வைத்தியர் என பட்டமளித்து குமுழமுனைக்கு அருகாமையில் உள்ள கரடிப்பூவல் என்ற இடத்தில் குடியமர்த்தினான். அங்கு இவர்களுக்கு பதினெட்டு குடிமைகளும் பல வயல் நிலங்களும் வழங்கப்பட்டதாக பரம்பரையாக கூறப்பட்டு வருகின்றது. பின்னர் வெளிநாட்டு படையெடுப்புக்களால் வன்னி அரசுகள் அழிந்த சூழலில் கரடிப்பூவல் கிராமத்தை கைவிட்டு குமுழமுனையில் குடியேறியதாக கூறப்பட்டு வருகின்றது.

குமுழமுனையில் குடியேறிய வைத்திய பரம்பரையினர் குமுழமுனை கிராம மக்களுக்கும் அயல் கிராம மக்களுக்கும் வைத்திய சேவையை செய்து வந்தனர். முன்னைய காலகட்டங்களில் பணப்புழக்கம் பெரிதாக இருக்கவில்லை. இலவசமாகவே சேவை செய்யப்பட்டது. பதிலுக்கு மக்கள் இவர்களது வயல்களை அறுவடை செய்து சூடு அடிப்பதற்கு கூலி பெறாமல் செய்தார்கள். இம்மரபு 1982ஆம் ஆண்டு வரை (பரத்தை) என்ற பெயரில் இடம்பெற்றது. அறுவடை நிகழும் நாளில் ஆடு அடித்து இறைச்சி சமைக்கப்படும். கள்ளும் வழங்கப்படும். இத்தகைய மரபு பிற்காலத்தில் சமூக மாற்றத்தால் மறைந்து விட்டது.

இவர்களது பரம்பரையில் குடும்பத்தில் மூத்த மகனே பெரும்பாலும் வைத்தியத்தை செய்யும் மரபு பின்பற்றப்பட்டது. தந்தை மகனுக்கு கோயிலில் வைத்து சத்தியம் செய்து வாக்குக் கொடுத்தல் முறைமூலம் பரம்பரையாக வைத்தியம் செய்யும் உரிமையை பெற்று வந்தனர். இந்நடைமுறைப்படி மூத்தமகன் கிருஸ்ணபிள்ளை ஆர்வம் இல்லாத காரணத்தால் இரண்டாவது மகன் சாமிநாதருக்கு பரம்பரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய உரிமை கையளிக்கப்பட்டது. இருப்பினும் கரடிப்பூவலார் இராச வைத்திய பரம்பரையில் வைத்தியத்தில் ஆர்வமான பலர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களிலும் கிளைவிட்டு பரந்து விரிந்து வைத்திய சேவையை செய்து வந்தனர். அவர்களுக்கிடையில் இருந்த உறவு முறைகளும் வைத்திய முறைகளில் காணப்படும் ஒற்றுமையும் அதை நம்பக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு தலைமுறை வைத்தியரும் தங்கள் அனுபவ வைத்திய முறைகளை தொகுத்து ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்திருந்தனர். இத்தகைய பல ஏடுகள் வீடு எரிந்த போது எரிந்து நாசமானதால் தனது தலைமுறை காலத்தில் அழிந்ததை இட்டு சாமிநாதரின் தந்தையான செல்லையா வைத்தியர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார். இதனால் குடியிருந்த காணியை கைவிட்டு தற்போது குடியிருந்த காணிக்கு இடம்பெயர்ந்து கல்வீடு கட்டி குடியேறினார்.

சிறுவயதில் தாய்மாரை இழந்து பல்வேறு துன்பங்கள் மத்தியிலேயே மூவரும் வளர்ந்தனர். மூத்தவர் கிருஸ்ணபிள்ளை வைத்தியத் துறையில் ஆரவம் காட்டவில்லை. அவரது வாழ்க்கை விசித்திரமானது. இளம் வயதிலேயே குடும்பம், சொத்து அனைத்தையும் துறந்து ஒரு துறவி போல் வாழ்ந்தார். அவரிடம் சில எருமை மாடுகளும் மாடு கட்டும் கயிறும், ஒரு பால் கலையமுமே அவரது சொத்தாக இறுதிவரை இருந்தது. மாடுகளில் காட்டிய அபரிமிதமான அன்பின் காரணமாக மாடுகளைத் தேடி சென்ற போது குமுளமுனை கிராமத்திலேயே இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். சகோதரி கற்பகம் இளம் வயதிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார்.

இவர் காரைநகரைச் சேர்ந்த கதிரவேலு அமராவதி தம்பதிகளின் மூத்த புதல்வியை 1964ஆம் ஆண்டு திருமணம் செய்தார். பின்னர் குடும்ப பாரம்பரிய சித்த வைத்தியத்தை பேணி கிராம மக்களுக்கும் அயல் கிராமங்களுக்கும் பெரும் சேவை செய்தார். 1983ஆம் ஆண்டுக்கு முன் குமுளமுனையில் பெரும்பாலானவர்கள் வீட்டிலேயே பிறந்தார்கள். இவரது தலைமையில் கிராம மருத்துவிச்சிகளின் உதவியுடன் வீட்டிலேயே அக்காலத்தில் பிரசவம் பார்க்கப்பட்டது. அக்காலத்தில் எந்தவொரு உயிர் ஆபத்துக்களும் சிக்கல்களும் ஏற்படவில்லை. பல இரவுகள் நித்திரை விழிக்கும் சூழ்நிலையும் ஏற்படும். பணத்தை எதிர்பார்க் காமலேயே இச்சேவைகள் இடம்பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வைத்திய சேவை மட்டுமல்லாது இளமையிலும் நடுத்தர வயதிலும் பாடசாலை அபிவிருத்தி கோயில் அபிவிருத்தி போன்ற சமூக பணிகளிலும் பெரும்பங்காற்றினார். பின்னர் இளைஞர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டார். கடவுள் நம்பிக்கையை கொண்டிருந்த போதும் தீவிர மதவாதியாகவோ மதத்தின் பெயரில் மூட நம்பிக்கைகளையோ கொண்டிருக்கவில்லை.

இவரது மருத்துவத்தின் மிகப் பிரபலம் பெற்றது குன்ம வாய்வு என அழைக்கப்படும் இரப்பைத் தாபிதம், இரப்பை சிறுகுடல் அழற்சி, Gastitis, Gastric ulcer. Heart burn, nausea, flatulence என நவீன மருத்துவத்தால் அழைக்கப்படும் வருத்தங்களுக்கு மிகத் திறம்பட சிகிச்சை அளித்தார். இலங்கையின் பல மாவட்டங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இடம்பெயர்ந்த பல தமிழர்களும் இவற்றிற்கு சிகிச்சை பெற்றார்கள். சில பத்தாண்டுகளுக்கு முன் இந்நோய்களுக்கு நவீன மருத்துவத்தில் சிறந்த சிகிச்சைகள் இருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இவர் தனது மூத்த மகனை ஆயுள்வேத மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரி ஆக்கினார். மூன்றாவது மகன் சந்திரசேகரை யுத்தத்தில் பலி கொடுத்தார். கடைசி இரண்டு மகள்மாரையும் யுத்த சூழ்நிலையில் நோய்வாய்ப்பட்டு சரியான மருத்துவ சிகிச்சை வழங்க முடியாத சூழலில் பலி கொடுத்தார். அதன்பின் அறுபது வயதைக் கடந்தபின் வைத்தியம் செய்வது நல்லது அல்ல என அடிக்கடி கூறுவார். ஆனாலும் பல பொதுமக்களும் அவரை விடுவதாக இருக்கவில்லை. வற்புறுத்தி எண்பது வயதை கடந்த போதும் சேவையைப் பெற்று வந்தனர். உண்மையான குருசிஸ்ய முறையில் சித்த மருத்துவத்தை கற்று தூய்மையான சித்த மருத்துவத்தை பேணி வளர்த்த 20வது தலைமுறை பாரம்பரிய வைத்தியர் என்ற பெருமை இவருடன் முற்றுப்பெற்றதாகவே கொள்ள வேண்டும். இவர் இருமுறை வடமாகாண முதலமைச்சரிடம் இருந்து விருதுகளைப் பெற்றார். இவரது மகன் சமூக மாற்றங்களால் கல்லூரியில் சித்த மருத்துவத்தைக் கற்று 21வது தலைமுறை வைத்தியராகிய போதும் பாரம்பரிய வைத்திய முறைகளில் இருந்து சமூக மாற்றங்களுக்கேற்ப தவிர்க்க முடியாது மாறிய சூழல் புரிந்து கொள்ளக்கூடியதே.

2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டாவது மகள் சரஸ்வதியின் அழைப்பின் பேரில் மனைவியுடன் இலண்டன் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு இரண்டாவது மகன் சந்திரகுமார் குடும்பத்துடனும் இரண்டாவது மகள் சரஸ்வதியின் குடும்பத்துடனும் பல இடங்களையும் பார்வையிட்டு சில மாதங்கள் அங்கு தங்கி மகன் வழங்கிய பரிசுப்பொருட்களுடன் நாடு திரும்பினார். பின்னர் மூன்றாவது மகள் சந்திரவதனாவுடனும் மருமகன் ராசனுடனும் பேரப்பிள்ளைகளுடன் ஒன்றாக மகிழ்சியாக இருந்தபோது தான் யுத்தம் தீவிரமானது. இச்சூழலில் மருமகனை ஒருவாறு காப்பாற்றி மூத்த மகளுடன் கொழும்பில் தங்கவைத்து பிரான்ஸ் செல்வதற்கு பெரிதும் உதவினார்.

குமுளமுனை கிராம மக்களைப் பொறுத்த வரை 1984ஆம் ஆண்டில் இருந்து பல தடவை இடம்பெயர்வை சந்தித்தவர்கள். இறுதியில் முள்ளிவாய்க்கால் வரை இடம்பெயர்ந்து பலதுன்பங்களையும் சந்தித்து உயிர் தப்பி வவுனியாவில் முகாமில் சில மாதங்கள் இருந்தார். பின்னர் முகாமில் இருந்து வெளியேறி மூத்த மகன் சந்திரபாலன் குடும்பத்துடன் சில வருடங்கள் தங்கி இருந்தார். இடம்பெயர்ந்து தங்கி இருக்கும் காலத்தில் நான்காவது மகன் சந்திரபோஸ் இற்கு இந்தியாவில் வைத்து திருமணம் செய்து வைத்தார். பின்னர் மகன் சந்திரபோஸ் இந்தியாவில் பல கோயில்களுக்கும் கூட்டிச் சென்று காட்டினார். பின் நாடு திரும்பி மீண்டும் வவுனியாவில் மூத்த மகனுடன் வசித்து வந்தார்.

மக்கள் மீள குடியேற அனுமதித்ததும் வீடு முற்றாக அழிந்த சூழலிலும் சொந்த ஊருக்கு திரும்பியே ஆவேன் என பிடிவாதமாக சென்று கடைசிமகன் சந்திரகாசனுடனும், மனைவியுடனும் தனது காணியில் சிறுகொட்டில் அமைத்து வசித்து வந்தார். மூத்த மகள் சந்திரமதியும் மூத்த மருமகன் ஜெயகுமாரும் இதற்கு பெரிதும் உதவினர். பின்னர் அரசின் வீட்டுத்திட்ட உதவியுடனும் எல்லாப் பிள்ளைகளின் உதவியுடனும் அழகிய சிறிய வீட்டைக் கட்டி குடியேறினார்.

யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் துன்பங்கள் காரணமாக ஏற்பட்ட மறதி நோய் படிப்படியாக அதிகரித்து கடந்த ஒரு வருடங்களாக யாரையும் இனங்காண முடியாத அளவுக்கு ஏற்பட்டது. அதைவிட அவருக்கு எந்த ஒரு நோயும் இருக்கவில்லை. இருப்பினும் நடமாடக்கூடியவராய் இருந்தமையால் அவரைக் கண்காணிப்பதில் மனைவி முழுக்கவனம் செலுத்தி வந்தார். உடல் வலுவும் நன்றாக இருந்தமையால் மனைவியை தள்ளிவிட்டு ஊர் உலாத்தப் புறப்பட்டு விடுவார். இச்சூழலில் நன்றாகவே அவரை பின்தொடர்ந்து மனைவி பராமரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணிப்பதற்கு சில நாட்களின் முன் சாப்பாடு உண்ணாமலும் நீர் அருந்தாமலும் இருந்த காரணத்தால் மூத்த மகனும் மூத்த மகளும் பார்ப்பதற்கு சென்றிருந்தனர். அப்போது அவரது குருதியில் குளுக்கோஸின் அளவு மிக அதிகமாக அதிகரித்து இருந்த காரணத்தால் மாஞ்சோலை வைத்தியசாலையில் 13.01.2018ம் திகதி அனுமதித்தார்கள். அங்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டு நோய் சீர் செய்யப்பட்டது. மறுநாள் வீடு திரும்புவார் என எதிர்பார்க்கப்பட்ட சூழலில் 15ம் திகதி திடீரென காலை 8மணி அளவில் மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்களின் கடும் போராட்டத்தால் வெற்றி கொள்ளப்பட்டபோதும் இரண்டாவது தடவை மீண்டும் 11.30 மணியளவில் ஏற்பட்ட மாரடைப்பில் இருந்து அவரைக் காப்பாற்ற முடியவில்லை. அவரது மரணம் அனைவருக்கும் கவலை தருவதாக இருப்பினும் படுக்கையில் கிடந்து துன்பப்படாமல் மரணிப்பதற்கும் அவர் கொடுத்து வைத்தவர் என்றே கொள்ள வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதலமைச்சரிடம் விருது பெற்ற போது



இரண்டாவது தடவையாக முதலமைச்சரிடம் பெற்ற விருதுகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டனில் இரண்டாவது மகள், பேரப்பிள்ளைகளுடன்



80வது பிறந்த தின நிகழ்வில்
மூத்த மகன் குடும்பத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர் செல்லையா சாமிநாதர் பெரும்பாலும் பயன்படுத்திய சித்த மருந்துகள்

## குளிகைகள்

1. ஈசுர குளிகை : பேதியாகவும், பிரசவ வலியை துரிதமாக்கி இலகுவான பிரசவத்திற்கு

2. பெரிய சிவப்பு குளிகை : சுவாசத்தொற்று நோய்களுக்கு பக்ரீரியா (கிருமி கொல்லியாக)

3. விசயராசன் குளிகை : பல்வேறு தொற்றுக்களால் ஏற்படும் காய்ச்சலுக்கு

4. பெரியகோரேசணை மாத்திரை : குழந்தைகளுக்கான சுவாசத் தொற்றுக்கு

5. காக்கணவன்சாற்று மாத்திரை : குழந்தைகளுக்கான சுவாசத்தொற்று மற்றும் மலச்சிக்கல்

6. முக்கூட்டு கோரோசணை: குழந்தைகளுக்கான பெரும்பாலான நோய்களுக்கு

7. கருபஞ்சாற்றுக்குளிகை : சிறுநீர்ப் பெருக்கியாக தொழிற்பட்டு வீக்கங்களைக் குறைக்கும்.

8. கௌரி பாசணக்குளிகை: கிருமிகளால் ஏற்படும் உணவு ஒவ்வாமை

9. கற்ப ஏலாதி மாத்திரை : கர்ப்பகாலத்தில் ஏற்படும் பெரும்பாலான நோய்களுக்கும் கர்ப்ப பராமரிப்புக்கும்.

10. சாதிலிங்க மாத்திரை : சுவாசத்தொற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணைகள்

1. அமுதசாகரம் : மன அழுத்தம், ஒவ்வாமை (தும்மல், பீனிசம்)
2. பெரியகோழி அவரைச் சாற்றெண்ணை : சகல தோல் வியாதிகளுக்கும்
3. கணை எண்ணை : ஒற்றைத்தலைவலி, கணைச்சூடு
4. பெரிய வாசுமாவிலங் கெண்ணை : கர்ப்பகால பராமரிப்பு, காயாசுவாதம், சுவாதகாயம், குதிரைவலி
5. பெரிய கொட்டைத்தோக்காய் எண்ணை : பாரிசவாதம், மூட்டுவாதம், முகவாதம்
6. சிறிய கொட்டைத்தேங்காய் எண்ணை : நாரிப்பிடிப்பு, முழங்கால்வாதம்
7. கிரந்தி எண்ணை : குழந்தைகளுக்கான நோய்த்தடுப்பு மருந்து
8. கொடியாள்கூந்தல்தைலம் : தலைமயிர் வளர
9. பருத்தி இலைச்சாற்றெண்ணைய் : மன அழுத்தம், யோசனை
10. கோழி முட்டைத்தைலம் : மண அழுத்தம்
11. வெற்றிலைச்சாற்றெண்ணை: தும்மல், மூக்கால் நீர்வடிதல், தலைவலி
12. தாளங்காய் எண்ணெய் : வாதம்
13. உள்ளி ஆமணக்கெண்ணை : நீடித்த மலச்சிக்கல், சீறுநீரகக்கல்

## குழம்பு, லேகியம், நெய்

1. இஞ்சிக்குழம்பு : களம், இரைப்பை, சிறுகுடல் பகுதிகளில் ஏற்படும் தாபிதம், அழற்சி (Gastric Ulcer)
2. ஏரல் குழம்பு : தைரொக்சின் குறைபாட்டால் ஏற்படும் நோய்கள்
3. வாலை லேகியம் : முதுமையால் ஏற்படும் பெரும்பாலான நோய்களுக்கு
4. தேற்றாங்கொட்டை குழும்பு : சிறுநீரக மற்றும் யோனித்தொற்றுக்கள் சிறுநீரகக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அக்கறா நெய் : ஊட்டச்சத்து குறைபாடுகளால் குழந்தைகளுக்கு ஏற்படும் பெரும்பாலான நோய்களுக்கு

## குழம்பு, லேகியம், நெய்

1. பெரிய கறுத்தைத்தூள் : உணவு ஒவ்வாமையால் ஏற்படும் வயிற்றுவலி, சத்தி, வயிற்றோட்டம்
2. சிவத்தைத்தூள் : அதிகூடிய மாவிலக்கு, அடிக்கடி ஏற்படும் மாதவிலக்கு
3. பறங்கிக்கிழங்கு சூரணம்: தோல் நோய்கள், வாதம்
4. தாமரைப்பூச்சூரணம் : தோல் நோய்கள், வாதம்
5. காயாசுவாதத்தூள் : கர்ப்பகால நோய்களில் இருந்து பாதுகாப்பதற்கு
6. தேவதாரபற்பம் : வாதம், மூட்டுவாதம், நாரிநோ, முதுகுவலி
7. மஞ்சள் பற்பம் : மாதவிலக்கு ஒழுங்கீனம்
8. தசமூலசூரணம் : பசியின்மை, உடல்நோ, முதுமையால் ஏற்படும் பொதுவான நோய்களுக்கு
9. வல்லாரை இலைச்சூரணம் : தீராத வாய் அவிச்சல்
10. கண்டங்கத்தரி சூரணம் : தொய்வு, மார்புச்சளி, சுவாசத்தொற்று
11. கடுக்காய் சூரணம் : இருமல், மலச்சிக்கல்
12. அமுதசக்கரை : நீரிழிவுக்கு
13. மான்கொம்பு பஸ்பம் : கல்சியம் குறைபாட்டால் ஏற்படும் அனைத்து நோய்களுக்கும்
14. அயசெந்தூரம் : இரும்புசத்து குறைபாட்டால் ஏற்படும் அனைத்து நோய்களுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்**

1934 – 01 – 31

**மறைவு**

2018 – 01 – 15

குமுழமுனை, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## செல்லையா சாமிநாதன்

(கரடிப்பூவலர் இராசவைத்தியர்)

விழிகள் கரைகின்றது
வேதனை நெஞ்சை முட்டுகிறதே....
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உம் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கின்றதே
வாய் பேச மறுக்கிறதே
உம் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள் இன்று
கண்ணீரில் மிதப்பதை தவிர்க்க ஒரு கனம்
மீண்டும் கண் திறக்க மாட்டீரோ

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த்துளிகளின் காணிக்கையாக........

அன்னையின் மடியில்
31 * 01 * 1934



ஆண்டவனின் அரவணைப்பில்
15 * 01 * 2018

அமரர்

## செல்லையா சாமிநாதன்

(கரடிப்பூவன் இராசவைத்தியர்)

மானிடர் வாழ்வின் மகத்துவம் கருதி
இல்லறம் புகுந்து இனிதாய் வாழ்ந்து
தந்தைக்கு தந்தையாய் தாய்க்கு தாயாய்
தம் மக்கள் சிறக்க வாழ்ந்தது கண்டோம்.

உவமை இல்லா உண்மை மனிதனே!
உன் வீரத்தைப் பார்த்தோம் வீரச் செயலிலே
உண்மையை உணர்ந்திட உறுதியாய் இருந்தீர்
பண்பினை பார்த்தோம் பண்பாளனாய் வாழ்ந்ததில்
சேவையை பார்த்தோம் எம்மவர் தலைவனாய்
தனையர்கள் தம்மையும் பொது சேவையில் இணைத்தீர்
ஆலோசகராக ஆட்சியே புரிந்தீர்

அலைகள் ஒருபுறம் ஆனது போக சமயமும் தமிழும் தழைத்திட
வாழ்ந்தீர் சாதியும் சமயமும் சமமெனக் காட்டினீர்
ஊருக்காக உறவினை கூட எதிர்க்கத்துணிந்தீர்
உண்மை மனிதனே உமக்காக அஞ்சலி
எம்மால் அதுதான் இயலாது நிற்கிறோம்
யாருக்கு யார்தான் ஆறுதல் கூறி
அவதியில் நாமும் ஆறுதல் அடைவோம்

அன்னாரின் பிரிவில் துயருறும் உறவுகளோடு நாமும்
இணைந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

வ/சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை
அதிபர்,ஆசியர்கள்.

Printing By Austriya Photo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணுலகில்
31 * 01 * 1934

விண்ணுலகில்
15 * 01 * 2018

## அமரர் திரு. செல்லையா. சுவாமிநாதன்
(கரடிப்பூவலார், இராசவைத்தியர்)

(எமது திணைக்கள உத்தியோகத்தர் ச. இரஜபாலன் அவர்களின் பாசமிகு அப்பப்பா)

நற் புவிதனைக்கு நல்புதல்வரைத் தந்து
நம்மையெல்லாம் அன்பின் மொழியதனால் வருடி
நடு நிலையின் தெய்வமாய் மிளிர்ந்து
எல்லோர் மனதையும் கொள்ளை கொண்ட மகாமேதையப்பா நீ!

சொல் வன்மையின் சொற்பனம் உந்தன் நா,
சோமரசத்தின் இனிமையோ உந்தன் பேச்சையா
சொர்க்கத்தின் இருப்பிடமோ உந்தன் உள்ளம்
சுவாமிநாதன் என்ற நாமம் பொருத்தமாயிற்று உந்தனுக்கு,

மண்ணின் மகிமை மாறாது வையகத்தில் வாழ்ந்து
மனதைவருடிய தங்கமகனே ஐயா – உங்கள்
மரணச் செய்தி எம் நெஞ்சத்தை வாட்டுகின்றது ஐயா!
உந்தன் ஆத்மா சாந்தியடைய,
இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

நிறைவேற்று எந்திரி, உத்தியோகத்தர்கள்,
கட்டடங்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்,
முல்லைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
31
01
1934

இறப்பு
15
01
2018

குமுழமுனை, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக்கொண்டவரும்
வவுனியா, பூந்தோட்டம் இராச வைத்திய நிலைய Dr.சந்திரபாலன் அவர்களின் தந்தையுமாகிய

## அமரர்.செல்லையா சாமிநாதன்

(கரடிப்பூவலர் இராசவைத்தியர்)

தோற்றப் பொலிவும்
துடிப்பான செயற்றிறனும்
ஏற்ற பணித்தரமும்
இவற்றால் மிளிர்ந்தவரே
மேன்மை பணி செய்து
மீளாத் துயிலுற்றீர் உம்
ஆத்மா சாந்திக்காய்
நாம் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
வர்த்தகர் சங்கம் - பூந்தோட்டம், வவுனியா.

விநாயகர் அச்சகம், குடியிருப்பு வீதி, பூந்தோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
31
01
1934

இறப்பு
15
01
2018

குமுழமுனை, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக்கொண்டவரும்
வவுனியா, பூந்தோட்டம் இராச வைத்திய நிலைய Dr.சந்திரபாலன் அவர்களின் தந்தையுமாகிய

## அமரர்.செல்லையா சாமிநாதன்

**(கரடிப்பூவலர் இராசவைத்தியர்)**

தோற்றப் பொலிவும்
துடிப்பான செயற்றிறனும்
ஏற்ற பணித்தரமும்
இவற்றால் மிளிர்ந்தவரே
மேன்மை பணி செய்து
மீளாத் துயிலுற்றீர் உம்
ஆத்மா சாந்திக்காய்
நாம் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**வர்த்தகர் சங்கம் - பூந்தோட்டம், வவுனியா.**

விநாயகர் அச்சகம். குமலிகுப்பு வீதி, பூந்தோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 31 | | 15 |
| 01 | | 01 |
| 1934 | | 2018 |



குமுளமுனை 05ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட,

## அமரர் செல்லையா சாமிநாதர்

(சித்த ஆயுர்வேத வைத்தியர்/கதைப்புலவர்)

மலர்களின் கூட்டங்களை
தேனீக்கள் நாடுவதும்
போல் மாணவ கூட்டங்கள் நாடி
வந்த காலம் கரைபுரண்டோட
சென்று விட்டதையா கருணை
இல்லாத காலனவன் உயிரைப்
பறித்து உற்றார் உறவுகளை
துடுப்பு இழந்த படகுகள்
போல் தவியாய் தவிக்க விட்டு
போனது ஏன் ஐயா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஸ்ரீ கொட்டுகிணற்று விநாயகர்
ஆலய பரிபாலனசபை
குமுளமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த்துளிகள்



மலர்வு 31 01 1934

உதிர்வு 15 01 2018

அமரர்
செல்லையா சாமிநாதன்
குழுமுனை,
முள்ளியவளை.

வளர் பிறையாய் உன் குடும்பம் வளர
தேய்பிறையாய் தேய்ந்து போன தியாகச் சுடரே....!
நீங்கள் உணர்வோடு கலந்த உறவே.....!
இன்று உங்கள் பிரிவு, நினைவால் வாழ்கின்றோம்

அதனால் உணர்வின் வலியை நீங்கள்
கண்ணீரின் அஞ்சலியாக சமர்ப்பிக்கின்றோம்.....


இவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**துயரால் வாடும்**
**செல்லையா பல்பொருள் வாணிபம்**
**(த. செல்லையா)**

077 6258510



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள்
# இதய நன்றிகள்

**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது இன்றே மறப்பது நன்று"**

எங்கள் குடும்ப தலைவன் நோயுற்ற வேளை உயிர்காக்க போராடிய மாஞ்சோலை வைத்தியர்கள் மற்றும் துணை ஊழியர்களுக்கும், மரண செய்தி அறிந்து உடனே வீட்டிற்கு வந்து ஆறுதல் உதவி புரிந்த நண்பர்கள், உறவினர்கள் மற்றும் தொலைபேசி, முகப்புத்தகம் மூலம் அனுதாபத்தில் பங்கு கொண்ட அத்தனை அன்புள்ளங்களுக்கும் மலர்வளையம் சாத்தி, கண்ணீர் அஞ்சலி, பதாகைகள், பிரசுரங்கள் என்பவற்றை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் ஏனைய 3ம் நாள், 8ம் நாள் கிரிகைகளில் கலந்து கொண்டோருக்கும் உணவு தேநீர் வழங்கி ஆறுதல் படுத்தியவர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தினருக்கும் 31ம் நாள் நினைவுகளுடன் கலந்து கொண்டவர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். வைத்தியர் செல்லை
# அவர்களின் வம்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ியர் செல்லையா சாமிநாதர்
## களின் வம்சாவழி

கதிரவேலு (அமரர்) + அமராவதி (அமரர்)

- சரவணமுத்து (அமரர்)
- ஆண்டிஐயா (அமரர்)
- அரியரத்தினம் (அமரர்)
- ஜெயலட்சுமி
- தெய்வேந்திரம் (அமரர்)
- தேவராணி
- குமாரசாமி

மரர்)

ாமிநாதர் + ஜெயலட்சுமி

- ந்திரசேகர் (அமரர்)
- சந்திரவதனி + ராசன்
  - லோஷன்
  - கிருஷன்
  - பிரஷன்
- சந்திரபோஸ் + சியாளினி
  - சானுஜன்
  - சானிகா
- சந்திரகாசன்
- சரோஜா (அமரர்)
- தாட்சாயினி (அமரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கை அனத்தத்தாலும், கொடும் யுத்தத்தாலும் அழிந்து போக
எஞ்சிய கரடிப்பூவலாரின் பொக்கிஷம்

அகரம் பிறின்டேஸ்-024 222 3772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org